கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 09.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தக்காளியில் ஒட்டுக்கட்டுதல் செயல்திறன் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் உலகக் காய்கறிகள் மையம் , தைவான் இணைந்து தாவர நல முனைப்பு நிதி உதவியுடன் தக்காளி மற்றும் அவரைப்பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. தக்காளிச் செடியை நோய் எதிர்ப்புத்திறன் உடைய கத்தரி ரகத்தின் வேர்ப்பகுதியுடன் இணைத்து ஒட்டுக்கட்டுவதன் மூலம் மழைக்காலங்களில் தக்காளியைத் தாக்கும் பூஞ்சாண மற்றும் பாக்டீரியல் நோய்களிலிருந்து பாதுகாக்கும் தொழில்நுட்பத்தினை உலகக்காய்கறிகள் மையம் கண்டறிந்துள்ளது. இந்த ஒட்டு கட்டுதல் தொழில் நுட்பத்தை விவசாயிகள் மற்றும் காய்கறி நாற்று உற்பத்தியாளர்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையில் ஒட்டுக்கட்டுதல் செயல்திறன் பயிற்சி 08.02.2024 அன்று சட்டக்கால் புதூர் கிராமத்தில் நடை பெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர்பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர் மு.சாந்தி அவர்கள் தலைமையுரையில் , மழைக்காலங்களில் பாக்டீரியல் வாடல் நோயைக் கட்டுப்படுத்த விவசாயிகள் பூஞ்சாண கொல்லிகளை உபயோகப்படுத்தினாலும் நோயின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த இயல்வதில்லை. நோய் எதிர்ப்புத்திறன் உடைய கத்தரி ரகத்தைக் கொண்டு உருவாக்கப்படும் ஒட்டுத்தக்காளி பாக்டீரியல் வாடல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு சிறந்த தொழில்நுட்பம் என்றார்.

ஒட்டு தக்காளியின் நோய் எதிர்ப்புத் திறனைப் பற்றியும் மற்றும் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மையில் உயிர்ப் பூஞ்சாண கொல்லிகளின் உபயோகம் பற்றியும் நோயியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க.அங்கப்பன் அவர்கள் கூறினார். குறிப்பாக ஒட்டுக்கட்டிய தக்காளி அதிக மழை நீர் மற்றும் வெள்ள வடிகால் குறைபாடுடைய நிலப்பரப்பில் தாங்கி நின்றதனையும் மற்றும் தக்காளியின் பயிர்க்காலம் நீண்டு அதிக மகசூல் தந்ததனையும் இம்முறையின் சிறப்புகளாகக் கூறினார்.

வேளாண் பல்கலைக்கழகத்தின் பயிற்சி பிரிவு பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா.ஆனந்தராஜா அவர்கள் வேளாண் பல்கலைக்கழகத்தின் இணையவழி இடுபொருள் விற்பனை பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். தாவர உயிர்த்தொழில் நுட்பவியல் விஞ்ஞானி முனைவர் நா.மணிகண்டபூபதி அவர்கள் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பில் உயிர்த்தொழில் நுட்பவியலின் பங்களிப்பைப் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மதுக்கரை வட்டாரத்தின் தோட்டக்கலை உதவி இயக்குநர் திரு.சி.சுரேஷ் அவர்கள் தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களைப் பற்றியும் மற்றும் வேளாண் பல்கலைக்கழகம் வழங்கியுள்ள இந்த தொழில் நுட்பத்தை விவசாயிகள் பின்பற்றி அதிக லாபம் இட்ட வேண்டும் என்று கூறினார்.

பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் பா.ச.சண்முகம் , ஒட்டுக்கட்டுதல் அடிப்படை மற்றும் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்களைச் செயல் விளக்கத்துடன் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். செயல் விளக்கத்திற்கு பின்பு பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள் ஒட்டுக்கட்டுதல் தொழில் நுட்பத்தினை ஆர்வமுடன் செய்து பார்த்தனர்.

இந்நிகழ்வில் கிணத்துக்கடவு மற்றும் மதுக்கரை , சட்டக்கல் புதூர் பகுதியை சார்ந்த சுமார் 65 தக்காளி விவசாயிகள் மற்றும் 12 தோட்டக்கலை அலுவலர்கள் பங்குபெற்று பயன் அடைந்தனர் .

*மக்கள் தொடர்பு அலுவலர்*